


விடுதலைப் போராட்டத் தியாகியும் முதுபெரும் கம்யூனிஸ்ட் இயக்கத் தலைவருமான 'தகைசால் தமிழர்' அய்யா நல்லகண்ணு அவர்களின் 99ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, அவரை அவரது இல்லத்தில், கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். அப்போது மகளிர் சுய உதவிக் குழுவினர் தயாரித்த பொருட்களை நல்லக்கண்ணு அவர்களுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். அதுபோது விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் உடனிருந்தார்.

### இளைய தலைமுறையினருக்கு விஞ்ஞான வாசலைத் திறந்துவிடும்

# கவிப்பேரரசு வைரமுத்துவின் 'மகா கவிதை'!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஜனவரி 1 – அன்று வெளியிடுகிறார்!

சென்னை, டிச. 27 -

கவிப்பேரரசு வைரமுத்துவின் புதிய படைப்பான 'மகா கவிதை' நூலை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஜனவரி 1ஆம் தேதி வெளியிடுகிறார்.

இவ்விழா சென்னைக் காமராசர் அரங்கில் மாலை 6 மணிக்கு நடைபெறுகிறது. நூலின் முதற்படியை ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் பெற்றுக் கொள்கிறார். கலைஞானி கமல்ஹாசன், விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை இருவரும் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

கவிப்பேரரசு வைரமுத்து ஏற்புரை ஆற்றுகிறார்.

'மகா கவிதை' என்பது நிலம், நீர், காற்று, தீ, வெளி என்ற ஐம்பூதங்கள் பற்றிய ஐந்து நெடுங் கவிதைகளின் பெருந்தொகுப்பு ஆகும். கவிப்பேரரசு வைரமுத்துவின் 30 மாதக் கடும் உழைப்பினால் உருவானது இந்தக் கவிதைநூல்.




**விஞ்ஞான வாசலைத் திறந்துவிடும் 'மகா கவிதை'!**

"அகவியல் - புறவியல் - அறவியல் இறையியல் என்றெல்லாம் பேசிய தமிழ்க் கவிதை முதன்முதலில் முழுக்க அறிவியல் பேசுகிறது. ஐம்பூதங்களின் அறிவியலும் ஈராயிரமாண்டு நீண்டு கிடக்கும் தமிழ்க் கவிதையின் அழகியலும் ஒருங்கிணைந்த பெருங்கவிதை மகா கவிதை. இளைய தலைமுறையின் எதிர்காலத்திற்கு இந்த மகா கவிதை விஞ்ஞான வாசலைத் திறந்துவிடும்" என்று கவிப்பேரரசு வைரமுத்து உறுதிபடத் தெரிவிக்கிறார்.

**ரூ. 5 லட்சம் பரிசு!**

மகா கவிதை என்ற தலைப்பின் ஐந்து எழுத்துக்களிலும் இந்த நூலின் ஐந்து உள்ளடக்கங்கள் மறைந்திருக்கின்றன. அவற்றைக் கண்டுபிடித்துச் சரியான விடை சொல்பவர்க்கு ஐந்து லட்சம் பரிசு என்று கவிப்பேரரசு வைரமுத்து ஏற்கெனவே அறிவித்திருந்தார்.

அந்தப் போட்டியில் வெற்றிபெற்றவர்கள் மேடையிலேயே அறிவிக்கப்படுவார்கள் மற்றும் முதலமைச்சர் கரங்களால் பரிசு பெறுவார்கள்.

கவிப்பேரரசு வைரமுத்துவின் பதிப்பகமான 'சூர்யா இலக்கியம்' இந்நூலை வெளியிடுகிறது. வெற்றித் தமிழர் பேரவைத் தோழர்கள் விழாவிற்கான ஏற்பாடுகளை முனைந்து செய்து வருகிறார்கள்.



தூத்துக்குடி மாவட்டத்தில் கடும் வெள்ள பாதிப்பு பகுதிகளை பார்வையிட்ட ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன், மழை வெள்ளம் பாதிப்பு – நிவாரண உதவி – பணி குறித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றார். இதில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, ஒன்றிய இணை அமைச்சர் முருகன், கழக நாடாளுமன்றக் கழகக் குழு துணைத் தலைவரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி, துறைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர், மாவட்ட ஆட்சியர் கோ. லட்சுமிபதி உள்ளிட்ட அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.


